# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter

# குருதீபம்
## කුරුදීපම්
## Gurutheepam





யூலை - 2019

இதழ் - 03



**போசகர்:**

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

***ஆலோசகர்கள்:***

திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை
கலாநிதி பா.தனபாலன்
திருமதி.செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்
திரு.ம.நிரேஸ்குமார்
திருமதி.ஜெ.உதயகுமார்
திருமதி.ஞா.கணேசநாதன்
திருமதி.சு.விக்னமோகன்
திரு.ப.இராஜேஸ்வரன்
திரு.பொ.விஜயகுமாரன்
கலாநிதி.எஸ்.பத்மராசா
திரு.அ.லோகநாதன்
திரு.து.இளங்குமரன்

***வெளியீடு:***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்

021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jncoe.net

**மாணவ ஆசிரியர் குழு:**

செல்வி எஸ்.தர்சிகா
செல்வி ஏ.ஆனந்தி
செல்வி வீ.மீனா
செல்வி ஏ.பிரியங்கா
செல்வி கே.பங்கயா
செல்வி வீ.ஆர்த்தி
செல்வி ஜீ.அபிஷா
செல்வி கே.வக்சலா
செல்வன் பீ.கிஷோக்
செல்வன் எஸ்.தர்சன்


## பீடாதிபதியின் செய்தி

இருபத்தோராம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான ஆசிரியர்களை உருவாக்குவதற்கு உந்து சக்தியாக அமைகின்ற விடயங்களில் புத்தாக்கத் திறன்விருத்தி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மாணவ ஆசிரியர்களின் அக்கத்திறன் விருத்தியை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்களால் வெளியிடப்படும் குருதீபம் செய்திமடலானது கல்லூரியின் மகிழ்ச்சியான தருணங்கள் பற்றிய செய்திகளை வெளி உலகிற்கு கொண்டு செல்வதிலும் முக்கிய பங்காற்றுகின்றது. இப்பணியில் ஈடுபட்டு வருகின்ற மாணவ ஆசிரியர்களையும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற ஆசிரிய கல்வியியலாளர் குழுவையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதில் பெரும-கிழ்வடைகின்றேன்.

**பீடாதிபதி**
**யாழ்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

## கணித - விஞ்ஞானப் பிரிவு மாணவ ஆசிரியர்களின் செயற்திட்டம்



விஞ்ஞான பாடப்பொறுப்பு விரி-வுரையாளர்களின் வழிகாட்டலில் பாடசாலை மாணவர்களுக்குப் புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி கற்பிக்கும் செயற்திட்டம் 29.06.2019 இல் நடைபெற்றது.

## குருதீபம் 2வது இதழ் வெளியீடு 06.06.2019



## குருதீபத்திற்கான இலட்சினை

மாணவ ஆசிரியர் செல்வன் அ.நித்தியபவனால் வடிவமைக்கப்பட்ட இலட்சினைக்கான கணினி வடிவமைப்பு விரிவுரையாளர்களான திருமதி சு.விக்னமோகன் மற்றும் திரு.ம.நிரேஸ்குமார் ஆகியோரின் வழிகாட்டலில் சித்திரப்பிரிவு மாணவ ஆசிரியர்களான செல்வன் எஸ்.கஜீபன் மற்றும் ஏ.அமல்ராஜ் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

## சிலைகளை மீளமைத்து அழகுபடுத்தும் செயற்திட்டம்




This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.07.2019



## சேவையாளர் அறிமுகம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதியாக சேவையாற்றிய உயர்திரு. எஸ்.கே யோகநாதன் அவர்கள் 20.09.2006 தொடக்கம் 27.04.2013 வரை தனது அளப்பரிய சேவையை கல்லூரிக்கு வழங்கினார். இவரது காலத்தில் மாணவ ஆசிரியர்களது இணைப்பாடவிதான செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்றதுடன் கல்லூரியின் இயற்கைச் சூழல் புதுப்பொலிவடைந்தது.

## அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக 18ம்அணி மாணவ ஆசிரியர்களுக்கான செயலமர்வு

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு 04.06.2019,06.06.2019 ஆகிய தினங்களில் கல்லூரியில் நடைபெற்றது. யாழ் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.எஸ்.ரவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ஆ.நித்திலவர்மன் மற்றும் திரு.பிறேம்குமார், திரு.செல்வராஜா ஆகியோர் வளவாளர்களாக செயற்பட்டனர். உபபீடாதிபதி திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளையின் வழிகாட்டலில் விரிவுரையாளர் திருமதி. ஜெ. உதயகுமாரினால் இச்செயலமர்வு ஒழுங்குபடுத்தி நடத்தப்பட்டது.

## தலைமைத்துவம் தொடர்பாக 18ம்அணி மாணவ ஆசிரியர்களுக்கான செயலமர்வு



மாணவ ஆசிரியர்களுக்கான தலைமைத்துவம் தொடர்பான செயலமர்வு 07.06.2019 வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. கல்விக்கும் தர மேம்பாட்டுக்கும் பொறுப்பான உப பீடாதிபதி திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளையின் வழிகாட்டலில் விரிவுரையாளர் திருமதி பப்ஸி மரியதாசனினால் இச்செயலமர்வு ஒழுங்குபடுத்தி நடத்தப்பட்டது.

## 17ம் அணி மாணவ ஆசிரியர்களுக்கான உள்ளகப் பயிற்சி தொடர்பான செயலமர்வு

17.06.2019 தொடக்கம் பாடசாலைகளில் உள்ளகப் பயிற்சி பெறவுள்ள மாணவ ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு 13.06.2019 வியாழக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரியின் பீடாதிபதியின் வழிகாட்டலில் தொடருறு கல்விக்குப் பொறுப்பான உபபீடாதிபதி திருமதி செ.சிவபாதம் மற்றும் இணைப்பாளர் திரு.கனகசபை பாஸ்கரன் ஆகியோரால் இச்செயலமர்வானது சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தி நடத்தப்பட்டது.

## குருதீபம் இலட்சினை வடிவமைப்பு போட்டிக்கான பரிசளிப்பு - 06.06.2019



குருதீபம் இலட்சினை வடிவமைப்பு போட்டியில் சித்திரத் துறை மாணவ ஆசிரியர் செல்வன் அ.நித்தியபவன் முதலாம் பரிசினைப் பெற்றுக்கொண்டார்.




## பேராசிரியர் ப.சந்திரசேகரம் ஞாபகார்த்த நினைவுப் பேருரை - 2019





பேராசிரியர் ப.சந்திரசேகரம் ஞாபகார்த்த நினைவுப் பேருரை 12.06.2019 புதன்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் பீடாதிபதியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் ஓய்வுநிலைக் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ச.இரவீந்திரன் "கல்வியின் புதிய செல்நெறிகள்" என்னும் தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்தினார்.



## மௌனமொழி போட்டிக்கான பரிசளிப்பு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தினரால் நடாத்தப்படும் மௌன மொழி கவிதையாக்கப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி 13.06.2019 வியாழக்கிழமை நடைபெற்றது. சித்திரத்துறை விரிவுரையாளர் திரு ரட்ணேஸ்வரனின் வழிகாட்டலில் நடைபெறும் இம்மௌன மொழி கவிதையாக்கப் போட்டியானது சித்திரத்துறை மாணவ ஆசிரியர்களினால் நடத்தப்பட்டு வருகின்றது.

## 17ம் அணி மாணவ ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழா




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 17ம் அணி மாணவ ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழா 13.06.2019 அன்று கல்லூரியின் பீடாதிபதியின் தலைமையில் கலாச்சார மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலைப் பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

## 17ம் அணி மாணவ ஆசிரியர்களை பெற்றோரிடம் கையளித்தல் மற்றும் பாடசாலை உள்ளகப் பயிற்சிக்கான நியமனக் கடிதங்களை வழங்குதல்



யுழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 17ம் அணி மாணவ ஆசிரியர்களை பெற்றோரிடம் கையளித்தல் மற்றும் பாடசாலை உள்ளகப் பயிற்சிக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்ச்சி 14.06.2019 வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.



## விசேட கல்விக்குப் பொறுப்பான கல்வி அமைச்சின் உயரதிகாரி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விஜயம்

விசேட கல்விக்குப் பொறுப்பான திரு ஹென்றி திசாநாயக்கா அவர்கள் 24.06.2019 அன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்திருந்தார். அன்றைய தினம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களுடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்

## அரச இலக்கிய விழாவை முன்னிட்டு இலக்கியப் பேருரை 2019



அரச இலக்கிய விழாவை முன்னிட்டு கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இலக்கியப் பேருரை இவ்வருடம் 24.06.2019ம் திகதி கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரும் அரச இலக்கிய ஆலோசனைக் குழு உறுப்பினருமாகிய பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் “பிரமாணங்கள்” எனும் தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களும் “யாழ்ப்பாணப் பண்டிதப் பாரம்பரியம்” என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர்எஸ்.சிவலிங்கராஜா அவர்களும் பேருரையாற்றினர்.

## கல்லூரிக்கீதம், ஆசிரியர் கீதம் என்பவற்றைப் பிரதான மண்டபத்தில் காட்சிப்படுத்தல்



விரிவுரையாளர்களான திருமதி வி.நரேந்திரா, திருமதி சிவை குகநேசன், திருமதி பப்ஸி மரியதாசன் மற்றும் செவ்வி க.விக்னேஸ்வரி ஆகியோரால் இச்செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 26.06.2019 இல் கல்லூரியின் பீடாதிபதியின் தலைமையில் நடைபெற்ற கீதங்களைத் திரைநீக்கம் செய்யும் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக தமிழ்மொழி மூலமான ஆசிரியர் கீதத்தை இயற்றி இசையமைத்த ஓய்வு நிலை இசை ஆசிரியர் உயர்திரு பொன்.ஸ்ரீ.வாமதேவன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.




**பொன்.ஸ்ரீ.வாமதேவன் ஆசிரியர் கீதம் இசைக்கின்றார்.**

## இசைத்துறை விரிவுரையாளருக்கு உயரிய விருது



இசைத்துறை விரிவுரையாளர் திருமதி சிவை குகநேசன் அவர்களுக்கு “வடஜோதி” என்னும் உயரிய விருது உடுவில் குபேரன் கலை மன்றத்தினரால் வழங்கப்பட்டது. வடக்கு மாகாண சாதனைப் பெண்கள் வரிசையில் இசைத்துறையில் இவர் ஆற்றிய சேவைக்காக இவ்விருது வழங்கப்பட்டது. இவரைக் கௌரவிக்கும் நிகழ்வு 16.06.2019 கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

## “போதைப் பொருட்பாவனைத் தடுப்பு” தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு




பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு.ஜீ.ஜெகதீசனினால் மேற்படி கருத்தரங்கு 27.06.2019 அன்று நடத்தப்பட்டது. கல்லூரியின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். பேராசிரியர்களின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இக்கருத்தரங்கானது சிறப்பானதாகவும் பிரயோசனமானதாகவும் அமைந்திருந்தது.

## “கணிதக்களம்” போட்டிக்கான பரிசளிப்பு



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கணித மன்றத்தினரால் நடாத்தப்படும் கணிதக்களம் போட்டிக்கான பரிசளிப்பு 27.06.2019 இல் நடைபெற்றது. கணித பாட விரிவுரையாளர்களின் வழிகாட்டலில் கணிதப் பிரிவு மாணவ ஆசிரியர்களினால் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## தாய்மை

உதிரம் உவந்து உணவைச் சுருக்கி
உணர்வும், உறவும் உள்ளத்தில் ஈந்து
உலகில் உயிரை உயரச் செய்து
உயர்ந்து மிளிரும் உன்னதம் ஒன்று

பிரிந்து பதிந்த கலத்தின் ஊடே
பிறந்து தவழும் மகவின் சுவடை
பிரிக்க விரும்பா தடமாய் ஏற்றே
பெண்மை கொள்ளும் பெருமை இது

மனதின் பாரம் மலைபோல் இருந்தும்
மகட்காய் வாழும் மனது இது
மாதம் வருடம் கடந்து மண்ணில்
மகத்தாய் மிளிரும் தாய்மை போல் எது?

**செல்வன் புஷ்பராஜா தர்ஷன்**
**ஆங்கிலப் பிரிவு**

(மௌனமொழி கவிதையாக்கப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

## உலகம் உங்களை விரும்ப…

- விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய் நிறைய எவரையும் வரவேற்று விடுங்கள்!
- பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்!
- பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரியுங்கள்
- முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவ மாட்டேன் என்று சொல்லாதீர்கள்!
- ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாயினும் எதிர் வாதம் புரியாதீர்கள்!
- குற்றமென்றாலும் குறையென்றாலும் அதைப் பெரிது படுத்தாதீர்கள்!

**செல்வன் பாலசுப்பிரமணியம் தசாஜனன்**
**கணிதப் பிரிவு**

## The Silent Nature

In the Darkest Evening, when
Seven colours coating the sky,
I am standing on the mountain,
With a lurking silence,
Except waves and birds.

I am the happiest person,
No risk from human,
No fake love or lies,
I am on the safe heaven,
Like babe in the mother’s womb.

No harm, no problems, caste or creed,
Only my mother and me,
I feel safe,
Like rain drops hidden by clouds.
I can smile with my heart,
Because there is no one to cheat me.

I am still on the edge of the hill,
I don’t panic because
I am not with humans,
I am standing with my **mother nature**.

**Miss P.Nilaksajini**
**English Course**

This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.07.2019